Date. 02.04.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS. 19/2024

**வா.சா. 1**

**பெயர். திருமதி. சுமையா பானு**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியார் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் செண்டியம்பாக்கத்திலிருந்து விழுப்புரத்திற்கு எனது திருமணம் முடிந்து அதற்காக வந்தேன். எனது திருமணத்திற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்கள் யார் உயிருடன் உள்ளார்கள் என்றால் மாப்பிள்ளை வீட்டார் என கையெழுத்து போட்ட முகமது அலி , ஐதர்அலி ஆகிய இருவர் உயிருடன் உள்ளார்கள். இவர்கள் எனது பெரியப்பா மற்றும் சித்தப்பா முறை ஆவார்கள். இவர்கள் தற்போது உயிருடன் உள்ளார்கள். பெண் வீட்டார்களில் சாட்சி கையெழுத்து செய்த இமாம் என்பவர் உயிருடன் உள்ளார். இதில் உள்ள அனைவருமே எனது உறவினர்கள் தான் என்றால் சரிதான். இமாம் எனக்கு சகோதரர் முறை ஆக வேண்டும். நான் வா.சா.ஆ.2 ஆக நசீர் அகமதுவின் இறப்பு சான்றை போட்டுள்ளேன். நான் வா.சா.ஆ. 3 ஆக அவரது வாரிசு சான்று வாங்கி போட்டுள்ளேன். நான் வா.சா.ஆ- 3 ஆவணம் 03/02/2023 ல் வாங்கியதாக சொல்லி போட்டுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் என் கணவரின் முதல் மனைவி மற்றும் அவரது பிள்ளைகள் ஆக எல்லோரும் சேர்ந்து அதை வாங்கினோம். என்னிடம்

காண்பிக்கப்படும் 12/12/2022 ந் தேதியிட்ட வாரிசு சான்றை யார் வாங்கியது என்று எனக்கு தெரியாது. எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ. 10 முதல் 12 வரையிலான ஆவணங்கள் எனது பிள்ளைகளின் தடுப்பு சான்று ஆகும். இந்த ஆவணங்களில் நான் சொல்லும் தகவல்களை தான் அவர்கள் எழுதிக்கொள்வார்கள் என்றால் நானும், என் கணவரும் சேர்ந்து தான் அந்த விவரங்களை சொன்னோம். எனக்கு 2014 ல் திருமணம் ஆனது. திருமணம் ஆவதற்கு முன்பு நான் சென்னையில் வேலை செய்து வந்தேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். ஆனால் நான் சின்ன வயதிலிருந்து அரபி மொழி படித்து திருக்குரானை கற்பித்து வந்தேன். நசீர் அகமதுவை திருமணம் செய்ததற்கு முன்பு நான் 2005 ம் ஆண்டு முகமது பிலால் என்ற ஒருவரை திருமணம் செய்திருந்தேன். முதல் திருமணம் எனக்கு திருச்சியில் நடந்தது. எனக்கு முதல் குழந்தை முதல் கணவர் மூலம் திருச்சியில் பிறந்தது. அந்த குழந்தை என் அம்மா வீட்டில் உள்ளார். தற்போது அவர் கல்லூரி படித்து வருகிறார். முதல் கணவருக்கும் எனக்கும் எப்போது விவாகரத்து (தலாக்) ஆனது என்றால் முகமது பிலாலை திருமணம் செய்து சரியாக 5 வருடம் கழித்து ஆனது. அவரை தலாக் செய்ததற்கான ஆவணம் எதையும் நான் போடவில்லை. முகமது பிலால் என்னை திருமணம் செய்துக்கொண்டு எங்களுக்கு பெண் குழந்தை பிறந்த பிறகு அவர் என் தங்கையுடன் ஓடிவிட்டார் என்றால் பொய். அதனால் தான் நான் கை குழந்தையுடன் கஷ்டப்படுகிறேன் என்பதால் என் தந்தை, அவரது நண்பரான நசீர் அகமது கடையில் வேலைக்கு விட்டார் என்றால் சரியல்ல தவறு. நான் ஏற்கனவே சொன்னது போல என் அப்பாவும், நசீர் அகமதுவும் ஒன்றாக படித்தவர்கள் என்றால் சரிதான். நான் கடையில் வேலை செய்த போது நசீர்

அகமதுவின் மனைவிக்கு விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற்றுவந்ததால் அவரை கவனித்துக்கொள்ள நான் வீட்டு வேலைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. என் நடவடிக்கை சரியில்லை என்பதால் நசீர் அகமதுவின் வீட்டிற்கு என்னை வரவேண்டாம் என்று 2019 ல் சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் திருவாய்மொழி தெருவில் தனியாக சென்று குடியிருந்தேன் என்றால் இல்லை. அதன் பிறகு எனக்கும், அந்த குடும்பத்திற்கு எந்த தொடர்பும் இல்லை என்றும், அவரது மறைவிற்கு பிறகு நானாக அவரது இரண்டாவது மனைவி என்று இந்த வழக்கில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 10 முதல் 19 ஆவணங்கள் என் குழந்தைகளை நசீர் அகமதுவுடன் தொடர்புபடுத்தி ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் என்றால் இல்லை. அவர்கள் குடும்பத்தில் நான் ஒத்தாசையாக இருந்து வந்ததால் அதன் அடிப்படையில் தான் எனக்கு பணம் கொடுத்து வந்தார்களே தவிர நசீர் அகமதுவின் மனைவி என்ற முறையில் எனக்கு அவர்கள் எந்த பாகமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா நசீர் அகமதுவிடம் என்னை மகள் போல் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லி தான் ஒப்படைத்தார் என்றும், அவர் இறப்பிற்கு நான் தான் ஆவணங்களை தயார் செய்து உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. இந்த குடும்பத்தில் ஆண் வாரிசுகள் யாரும் இல்லை என்பதால் அவருக்கு சம்மந்தமில்லாத குழந்தையை காட்டி ஆண் வாரிசு என உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நசீர் அகமது இறந்ததற்கு பிறகு நான் வேறு திருமணம் எதுவும் செய்யவில்லை. 2021 லேயே எனக்கும் ஷேக்சாதிக் பாஷா என்பவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றும் அதை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் சொல்லியுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விசயங்கள் பொய்யான விசயங்கள் என்றும், எனது வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.